கீழ்நாற்பிரபந்த விருத்தியுரை 8-ம் புஸ்தகம்

உ

சங்கச்செய்யுள்.

மதுரைத்தமிழாசிரியர்மகனார்

கபிலர் ~~பூதஞ்சேந்தனார்~~ செய்த

# இன்னா நாற்பது

## மூலமும்,

மஹாவித்வான் கா. இராமசாமிநாயுடு அவர்களால்

இயற்றப்பட்ட

## விருத்தியுரையும்.

இவை

பென்ஷன் சுபேதார்-தஞ்சை. சாம்பசிவம் பிள்ளை

அவர்கள் குமாரர்

தஞ்சை-எஸ். குமாரசுவாமிபிள்ளையால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1909.

Copyright]

விலை அணா-1½

[Registered.

கடவுள் துணை.

# இன்னா நாற்பது

## மூலமும் உரையும்.

முக்கட் பகவ னடிதொழா தார்க்கின்னா
பொற்பன வூர்தியை யுள்ளா தொழுகின்னா
சக்கரத் தானை மறப்பின்னா தாங்கின்னா
சத்தியான் றாடொழா தார்க்கு.

பதவுரை. முக்கண் - மூன்று கண்களையுடைய, பகவன் - சிவபிரானது, அடி - திருவடியை, தொழாதார்க்கு - வணங்காதவர்க்கு, இன்னா - துன்பமுண்டாம்; பொற்பு - அழகாகிய, அன்ன ஊர்தியை - அன்னவாகனனாகிய பிரமனை, உள்ளாது - நினையாமல், ஒழுகு - ஒழுகுதல், இன்னா - துன்பந்தருவதாம்; சக்கரத்தானை - சக்கரப்படையை யுடையவனாகிய திருமாலை, மறப்பு - மறத்தல், இன்னா - துன்பந்தருவதாம்; ஆங்கு - அவ்வாறே, சத்தியான் - வேற்படையை யுடையவனாகிய முருகக் கடவுளின், தாள் - திருவடியை, தொழாதார்க்கு - வணங்காதவர்க்கு, இன்னா - துன்பமுண்டாகும் என்றவாறு.

கருத்துரை. சிவபெருமான் முதலியவர்களுடைய திருவடிகளைத் தொழாதார்க்கு உண்டாவது துன்பமேயா மென்பதாம்.

விருத்தியுரை. சோமசூரியாக்கினிகளை மூன்றுகண்களாக வுடையவராதலால் சிவபெருமானை 'முக்கட்பகவன்' என்றார்; "இமையாத முக்கண் மூவரிற் பெற்றவன்" என்றார் மணிவாசகரும். ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறுகுணங்களுக்கும் பகம் என்று பெயர்; இந்த ஆறு குணங்களையு முடையவன் பகவன். அன்ன அன எனத் தொகுத்தலாயிற்று. ஒழுகு - முதனிலைத் தொழிற்பெயர். மறப்பு - தொழிற்பெயர். சத்தி - வேல். இன்னாது - தீயது; இது இன்னா என ஈறு தொகுத்தல் பெற்றது. இச்செய்யுளில் முக்கட்பகவன் முதலிய மூவரையும் வழிபடலால் இது மூவரையும் அங்கமாகவுடைய முதற்கடவுள் வணக்க மெனக்கொள்க. (க)

பந்தமில் லாத மனையின் வனப்பின்னா
தந்தையில் லாத புதல்வ னழகின்னா
வந்தண ரில்லிருந் தூணின்னா தாங்கின்னா
மந்திரம் வாயா விடின்.

ப-ரை. பந்தம் இல்லாத - சுற்றமில்லாத, மனையின் - வீட்டின், வனப்பு - அழகானது, இன்னா - துன்பந்தருவதாம்; தந்தை இல்லாத - தகப்பனில்லாத, புதல்வன் - புத்திரனது, அழகு - அழகானது, இன்னா - துன்பந்தருவதாம்; அந்தணர் இல் இருந்து - வேதியர் வீட்டிலிருந்து, ஊண் - (வேதியரல்லாதார்) உண்ணுதல், இன்னா - துன்பந்தருவதாம்; ஆங்கு - அவ்வாறே, மந்திரம் - ஆலோசனை, வாயாவிடின் - வாய்க்காதொழியின், இன்னா - (அரசர்க்குத்) துன்பந்தருவதாம், எ-று.

க-ரை. சுற்றமில்லாத மனையினழகும், தந்தையில்லாத புதல்வனழகும், பார்ப்பார் வீட்டிற் பார்ப்பாரல்லாதா ரிருந்துண்ணுமுணவும், மந்திராலோசனையில்லாத காரியமுந் தீயவெண்பதாம்.

வி-ரை. பந்தம் - கட்டு; அது இங்கு உறவினர்க்காயிற்று. உறவினரில்லாத மனைவாழ்க்கை எவ்வளவு அழகாயிருப்பினும் அது பயனற்றதென்பது தோன்ற'பந்த மில்லாத மனையின் வனப்பின்னா' என்றார். புதல்வன் - புதல்போற் கிளைப்பவன் என்பது பொருள். அந்தணர் - அழகிய தட்பமுடையார்; வேதத்தி னந்தத்தை யணைவோர் எனினுமாம். மந்திரம்-சூழ்ச்சி (ஆலோசனை). ஊண் - முதனிலை திரிந்த தொழிற்பெயர். (உ)

பார்ப்பாரிற் கோழியு நாயும் புகலின்னா
வார்த்த மனைவி யடங்காமை நன்கின்னா
பாத்தில் புடைவை யுடையின்னா வாங்கின்னா
காப்பாற்றா வேந்த னுலகு.

ப-ரை. பார்ப்பார் - வேதியரது, இல் - வீட்டில், கோழியும் நாயும் - கோழிகளும் நாய்களும், புகல் - நுழைதல், இன்னா - துன்பந்தருவதாம்; ஆர்த்த - (தாலி) கட்டின, மனைவி - மனையாள், அடங்காமை - (கணவனுக்கு) அடங்கா தொழுகுதல், நன்கு இன்னா - மிகவுந் துன்பந்தருவதாம்; பாத்து இல் - இணையில்லாத, புடைவை - புடைவையை, உடை-உடுத்தல், இன்னா - துன்பந்தருவதாம்; ஆங்கு-அவ்வாறே, காப்பாற்றா - காக்கமாட்டாத, வேந்தன் - அரசனது, உலகு - ஊர்கள், இன்னா - துன்பமுடையனவாம், எ-று.

க-ரை. பார்ப்பார் வீட்டிற் கோழியும் நாயும் புகுதலும், அடங்காத மனைவியை யொருவ னுடைத்தா யிருத்தலும், தனிப்புடைவை யுடுத்தலும், காப்பாற்றாத அரசனூரி லிருத்தலும் தீயவென்பதாம்.

வி-ரை. ஆர்த்தல் - கட்டுதல். மனைவியென மேல் வருதலால் ஆர்த்தல் என்பதற்குத் தாலிகட்டின எனப் பொருளுரைக்க லாயிற்று. அடங்காமை-எதிர்மறைத் தொழிற்பெயர். ஒற்றைப்புடைவை

யுடுக்கலாகா தென்பதுதோன்ற, 'பாத்தில் புடைவை யுடையின்னா' என்றார். உடை - தொழிற்பெயர். (௩)

கொடுங்கோன் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா
நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா
கடுமொழியாளர் தொடர்பின்னா வின்னா
தடுமாறி வாழ்த லுயிர்க்கு.

ப ரை. கொடுங்கோல் - கொடுங்கோல் செலுத்துகிற, மறம் - கொலைத் தொழிலையுடைய, மன்னர்கீழ் - அரசரது குடையின்கீழ், வால்- தழ்வாழ்தலானது, இன்னா - துன்பமாம்; புணை இன்றி - தெப்பமில்லாமல், நெடு நீர் - பெருநீரை, நீந்துதல் - நீந்திக் கடத்தல், இன்னா - துன்பந் தருவதாம்; கடுமொழி ஆளர் - வன்சொல் வழங்குவோருடைய, தொடர்பு - நட்பு, இன்னா-துன்பந் தருவதாம்; உயிர்க்கு - உயிர்களுக்கு, தடுமாறிவாழ்தல் - தடுமாற்றமடைந்து வாழ்தலானது, இன்னா - துன்பந்தருவதாம், எ-று.

க-ரை. கொடுங்கோ லரசர்கீழ் வாழ்தலும், பெருவெள்ளத்தில் தெப்பமில்லாமல் நீந்துதலும், வன்சொல்லுடையாரது நட்பும், தடுமாறி வாழ்தலும் தீங்கென்பதாம்.

வி-ரை. கோடுங்கோல் கொடுங்கோல் எனக் குறுகிற்று. கொடுங்கோல் என்பதற்கு நீதிநெறி தவறின அரசாட்சி யென்பது பொருள். தொடர்பு - சம்பந்தம் எனினுமாம். தடுமாறுதல் - மனங் கலங்குதல். எக்காலத்துந் துன்பமே தருதலால் 'கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தலின்னா' என்றும், கைந்நீத்தினால் அபாயம் நேரிடுமாதலால், 'நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா'என்றும், அவமானத்துக் கேதுவாதலால், 'கடுமொழி யாளர் தொடர்பின்னா' என்றும், மனக்கலக்கத்தோடு வாழ்தல் உயிர்க்கின்பந்தாராதாதலால் 'தடுமாறி வாழ்த லுயிர்க்கின்னா' என்றும் கூறினார். கடுமொழி-துன்பப்பயன் தருஞ்சொல்.

எருதி லுழவர்க்குப் போகிர மின்னா
கருவிகள் மாறிப் புறங்கொடுத்த லின்னா
திருவுடை யாரைச் செறலின்னா வின்னா
பெருவலியார்க் கின்னா செயல்.

ப-ரை. எருது இல் - எருதில்லாத, உழவர்க்கு - உழுதொழிலாளர்க்கு, போகு ஈரம் - செவ்வி கழியும் ஈரம், இன்னா - துன்பந் தருவதாம்; கருவிகள் - (கையிற்பிடித்த) படைகளின் தொழில்கள், மாறி-மாறுபட்டு, புறங்கொடுத்தல்-(பகைவர்க்குப்)புறங்கொடுத்தல்-இன்னா - துன்பந் தருவதாம்; திரு உடையாரை - செல்வமுடையவரை, செறல் -பகைத்துக்கொள்ளுதல், இன்னா-துன்பந்தருவதாம்; பெரு வலியார்க்கு - பெருவலியை யுடையவர்க்கு, இன்னா செயல்-துன்பஞ்செய்தல், இன்னா - துன்பந்தருவதாம், எ-று.

க-ரை. எருதில்லாத வுழவர் முதலியோர்க்குச் செவ்விகழியும் ஈரமுதலியவும் தீயவென்பதாம்.

வி-ரை. எருது - உழுமாடு. உழவர்-உழுதொழில் செய்வோர். செவ்வி - பதம். கையிற் பிடித்த ஆயுதங்களால் அவ்வவற்றின் தொழில்களைச் செய்வித்துப் பகைவரை வெல்லாது புறங்கொடுத்தல் அரசர்க்குத் தீங்கு ஆதலால், 'கருவிகள் மாறிப் புறங்கொடுத்த லின்னா' என்றார். திரு - செல்வம். செறல் - செறுநினைத்தல். தம்மின் வலியார்க்குத் தீங்கு செய்தால் அவர் அதற்குப் பதின்மடங்கு தீங்கு செய்யவல்லராதலால் 'பெருவலியார்க் கின்னாசெயல் இன்னா' என்றார். (௬)

சிறையில் கரும்பினைக் காத்தோம்ப லின்னா
புரைசேர் பழங்கூரை சேர்ந்தொழுக லின்னா
முறையின்றி யாளு மரசின்னா வின்னா
மறையின்றிச் செய்யும் வினை.

ப-ரை. சிறை இல் கரும்பினை - வேலியில்லாத கரும்பை, காத்து ஓம்பல்-காப்பாற்றுதல், இன்னா - துன்பந்தருவதாம்; புரை சேர்-துவாரங்கள் பொருந்திய, பழங்கூரை-பழைய கூரை வீட்டில், சேர்ந்து ஒழுகல் - பொருந்தி வாழ்தல், இன்னா - துன்பந்தருவதாம்; முறை இன்றி ஆளும் - செங்கோல் முறைமையில்லாமல் ஆளுகிற, அரசு - அரசாட்சி, இன்னா - துன்பந் தருவதாம்; மறை இன்றி - மந்திராலோசனை யில்லாமல், செய்யும் வினை - செய்யுங் காரியம்; இன்னா - துன்பந்தருவதாம், எ-று.

க-ரை. வேலியில்லாத கரும்பைக் காப்பாற்றுதலும், ஒழுக்கல் வீட்டில் வாழ்தலும், முறைகெட ஆளுமரசாட்சியும், ஆலோசனை யில்லாமற் செய்யுங்காரியமும் தீயவென்பதாம்.

வி-ரை. வேலியில்லாத கரும்பைக் காத்தலிற் பயனில்லை யாதலால் 'சிறையில் கரும்பினைக் காத்தோம்ப லின்னா' என்றும், ஒழுக்கல் வீட்டிலிருத்தல் எப்பொழுதும் அபாயத்துக் கேதுவாத லால், 'புரைசேர் பழங்கூரை சேர்ந்தொழுக லின்னா' என்றும், முறைசெய்யாத அரசன் கெடுதல் திண்ணமாதலால் 'முறையின்றி யாளு மரசின்னா' என்றும், எண்ணாது செய்யும் வினை முட்டின்றி முடிவுபெறா தாதலால், 'மறையின்றிச் செய்யும் வினை இன்னா' என்றும் கூறினார். பயனின்றென்பதை வற்புறுத்தற்குக் காத்து என்றமையாது ஓம்பல் என்றும் கூறினார். (சு)

அறமனத்தார் கூறுங் கடுமொழியு மின்னா
மறமனத்தார் ஞாட்பின் மடிந்தொழுக லின்னா
இடும்பை யுடையார் கொடையின்னா வின்னா
கொடும்பா டுடையார்வாய்ச் சொல்.

ப-ரை. அற மனத்தார் - தருமசிந்தை யுள்ளவர்கள், கூறும் - சொல்லுகிற, கடுமொழியும் - கடுஞ் சொல்லும், இன்னா - துன்ப

தருவதாம்; மற மனத்தார் - வீரத்தன்மையுள்ள நெஞ்சுடையவர், ஞாட்பில் - போரில், மடிந்து ஒழுகல் - சோம்பியிருத்தல, இன்னா - துன்பந்தருவதாகும்; இடும்பை உடையார் - (வறுமையால்) துன்புறுவோர் செய்யும், கொடை - வண்மை, இன்னா - துன்பந் தருவதாம்; கொடும்பாடு உடையார் - கொடும்பாடுடையவரது, வாய்ச்சொல் - வாய்ச்சொற்களும், இன்னா - துன்பந் தருவனவாம், எ-று.

க-ரை. தருமசிந்தை யுள்ளவர்கள் சொல்லுங் கடுஞ்சொல்லும், வீரர் போர்முகத்தில் சோம்பியிருத்தலும், வறியர் கொடையும், நடுவுநிலைமை யில்லாதவரது சொல்லும் தீயவென்பதாம்.

வி-ரை. தருமசிந்தை யுள்ளவர் வாயிற் கடுமொழி யுண்டாதல் தீதாதலால் 'அறமனத்தார் கூறுங் கடுமொழியு மின்னா' என்றும், வீரர் போர்முகத்தில் சோம்பியிருத்தல் தீதாதலால், 'மறமனத்தார் ஞாட்பின் மடிந்தொழுக லின்னா' என்றும், வறிஞர் கொடையுடைமை விரும்பின் அது முற்றறுதாதலால், 'இடும்பையுடையார் கொடை யின்னா' என்றும், கொடியாரது சொல் துன்பந்தருவ தாதலால், 'கொடும் பாடுடையார் வாய்ச் சொல் இன்னா' என்றும் கூறினார். கடுமொழி - நஞ்சுபோலுஞ் சொல் எனினுமாம். ஞாட்பு - போர்க்களம். மடிதல் - சோம்பியிருத்தல். கொடை - தொழிற்பெயர், கொடும்பாடு - ஒரு சொல்லாய் கொடுமையெனப் பொருள்பட்டு நின்றது. கொடுமை - நடுவுநிலைமையின்மை. இது,

"தேமென் கிளவிதன் பங்கத் திறையுறை தில்லையன்னீர்
பூமென் றழையுமம் போதுங்கொள் ளீர்தமி யேன்புலம்ப
வாமென் றருங்கொடும் பாடுகள் செய்துநுங் கண்மலராங்
காமன் கணைகொண் டலைகொள்ள வோமுற்றக் கற்றதுவே"

என்னுந் திருக்கோவைச் செய்யுளானும் அதனுரையானும் இனிது விளங்கும் அவரதுவாய் நன்மொழியின் றிப்பாதென்ப துணர்த் தற்கு வாய்ச்சொல் என மிகைபடக் கூறினார்.

ஆற்ற லிலாதான் பிடித்த படையின்னா
நாற்ற மிலாத மலரி னழகின்னா
தேற்ற மிலாதான் றுணிபின்னா வாங்கின்னா
மாற்ற மறியா னுரை.

ப-ரை. ஆற்றல் இலாதான் - (பகைவரை வெல்லும்) வலியில்லாதவன், பிடித்த படை - கையிற்பிடித்த ஆயுதமானது, இன்னா - துன்பந் தருவதாம்; நாற்றம் இல்லாத - மணமில்லாத, மலரின் - பூவினது, அழகு - அழகானது, இன்னா - துன்பந்தருவதாம்; தேற்றம் இலாதான் - தெளிவில்லாதவன், துணிபு - ஒருகாரியஞ் செய்யத் துணிதல், இன்னா - துன்பந் தருவதாம்; ஆங்கு - அவ்வாறே, மாற்றம் அறியான் - பேச அறியாதவனது, உரை - சொல்லானது, இன்னா - துன்பந்தருவதாம், எ-று.

க-ரை. வலியில்லாதவன் பிடித்த ஆயுதமும், மணமில்லாத மலரினழகும், தெளிவில்லாதவனது காரியத்துணிபும், சொல்லவறியாதவனது சொல்லும் தீயவென்பதாம்.

வி-ரை. வலியில்லாதவன் பிடித்த ஆயுதம் பயன்படாதாதலால் 'ஆற்ற லிலாதான் பிடித்த படையின்னா' என்றும், மணமற்ற மலரை யொருவரும் விரும்பாராதலால் 'நாற்ற மிலாதமலரி னழகின்னா' என்றும், மனத்தெளிவில்லாதான் ஒரு காரியத்தைத் துணிந்து செய்யத் தொடங்குதல் தீங்காதலால் 'தேற்ற மிலாதான் றுணிபின்னா' என்றும், எதிரியின் சொற்பொரு ளறியாதவன் சொல் தீமை பயக்குமாதலால் 'மாற்ற மறியா னுரை யின்னா' என்றும் கூறினார். படை-தொழிலாகுபெயர், படுத்தற்றொழிலையுடையது; படுத்தல்-கொல்லுதல். நாற்றம்-இங்கு நறுநாற்றத்தைக் குறித்தது. தேற்றம் - [illegible]; துணிபு - நிச்சயித்தல். மாற்றம்-சொல்; இது சொற்பொருள் [illegible]றிற்று.

பகல்போலு நெஞ்சத்தார் பண்பின்மை யின்னா
நகையாய நண்பினார் நாரின்மை யின்னா
இகலி னெழுந்தவ ரோட்டின்னா வின்னா
நயமின் மனத்தவர் நட்பு.

ப - ரை. பகல்போலும் நெஞ்சத்தார் - சூரியன்போன்ற மனத்தையுடையவர், பண்பு இன்மை-நற்குணமில்லாதிருத்தல், இன்னா - துன்பந்தருவதாம்; நகை ஆய நண்பினார்-நகைத்தற்குரிய நண்பரது, நார் இன்மை - அன்பில்லாமை, இன்னா - துன்பந் தருவதாம்; இகலின் எழுந்தவர் - போர்செய்ய வெழுந்தவர், ஓட்டு-புறங்காட்டியோடுதல், இன்னா - துன்பந் தருவதாம்; நயம் இல் மனத்தவர் - விருப்பமில்லாத மனத்தை யுடையவரது, நட்பு - நட்பானது, இன்னா-துன்பந்தருவதாம், எ - று.

க - ரை. பகல்போலு நெஞ்சத்தார் பண்பின்மையும், நகையாகிய நண்புடையாரது அன்பின்மையும், போர்க்கெழுந்தவர் ஓடுதலும், நீதியில்லாதவரது நட்பும் தீயவென்பதாம்.

வி - ரை. களங்கமற்ற மனத்தை யுடையவர் நற்குணமாறுதல் தீமையாதலால் 'பகல்போலு நெஞ்சத்தார் பண்பின்மை யின்னா' என்றும், அன்பிலார் செய்யும் நகை நட்புத்தீமை பயத்தலால் 'நகையாய நட்பினார் நாரின்மை யின்னா' என்றும், போர்க்கென் றெழுந்தவர் முதுகுகொடுத் தோடுதல் அவமானமாதலால் 'இகலி னெழுந்தவ ரோட்டின்னா' என்றும், விருப்பமில்லாத மனத்தாரது நட்புத் துன்பமே தருதலால் 'நயமில் மனத்தவர் நட்பு இன்னா' என்றும் கூறினார். ஓட்டு - தொழிற்பெயர்; ஓடுதல். பகல் - நகத்தின் நடுவாணியெனினுமாம்; இது ஒருபாற் கோடாமையாகிய நடுவுநிலைமையைக் குறிக்கும்.

கள்ளில்லா மூதூர் களிகட்கு நன்கின்னா
வள்ளல்க ளின்மை பரிசிலர்க்கு முன்னின்னா
வண்மை யிலாளர் வனப்பின்னா வாங்கின்னா
பண்ணில் புரவி பரிப்பு.

ப - ரை. கள் இல்லா - கள் இல்லாத, மூதூர்-பழையவூர்கள், களி கட்கு - கள்ளுண்டு களிப்பார்க்கு, நன்கு இன்னா-மிகவும் துன்பந்தருவதாம்; வள்ளல்கள் இன்மை - வள்ளல்க ளில்லாதிருத்தல், பரிசிலர்க்கு - இரவலர்க்கு, முன் இன்னா - மிகவுந் துன்பந் தருவதாம்; வண்மை இலாளர் - கொடையில்லாதாருடைய, வனப்பு-அழகானது, இன்னா - துன்பந் தருவதாகும்; ஆங்கு - அவ்வாறே, பண் இல் - கல்லணையில்லாத, புரவி - குதிரையானது, பரிப்பு - தாங்குதல், இன்னா - துன்பந்தருவதாம், எ - று.

க - ரை. களிகட்குக் கள்ளில்லாத வூரும், பரிசிலர்க்கு வள்ளல்க ளில்லாமையும், கொடையில்லாதவ ரழகும், பண்ணில்லாத குதிரையின் செலவும் தீயவென்பதாம்.

வி - ரை. களி - கள்ளுண்டுகளிப்பவன்; இவனுக்குக் கள்ளிலா வூர் தீதாதலால் 'கள்ளிலா மூதூர் களிகட்கு நன்கின்னா' என்றும், கொடுப்பவரின்மை வறியார்க்குத் தீதாதலால் 'வள்ளல்க ளின்மை பரிசிலர்க்கு முன்னின்னா' என்றும், ஈகையிலாதவரது அழகு பயனுடைத்தன் றாதலால் 'வண்மை யிலாளர் வனப்பின்னா' என்றும், கல்லணையில்லாத குதிரை ஒருவனைத் தாங்குதல் முடியாதாதலால் 'பண்ணில் புரவி பரிப்பு இன்னா' என்றும் கூறினார். வள்ளல் - வரையாது கொடுப்போன். பரிசிலர் - யாசகர். கல்லணை - குதிரைமேற் றவிசு. பரிப்பு - தொழிற்பெயர். (௧0)

பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரைத்த லின்னா
இருள்கூர் சிறுநெறி தாந்தனிப்போக் கின்னா

வருளில்லார் தங்கட் செலவின்னா வின்னா
பொருளில்லார் வண்மை புரிவு.

ப-ரை. பொருள் உணர்வார் - பொருளறிவோர், இல் வழி - இல்லாத இடத்தில், பாட்டு உரைத்தல்-பாட்டுப்பாடுதல், இன்னா—, இருள் கூர் - இருள்மிகுந்த, சிறு நெறி - சிறுவழியில், தனி போக்கு - தனியே போகுதல், இன்னா —, அருள்இல்லார்கண் - அன்பில்லாதவரிடத்தில், செலவு - செல்லுதல், இன்னா—; பொருள் இல்லார் - பொருளில்லாதவர், வண்மை புரிவு - கொடைத்தொழிலை விரும்புதல், இன்னா —, எ-று.

க-ரை. பொருளறிவா ரில்லாதவிடத்தில் பாட்டுரைத்தலும், இருள் மிகுந்த சிறுவழியில் தனியே செல்லுதலும், இரக்கமில்லாதவரிடத்து ஒன்றைப் பெறவிரும்பிச் செல்லுதலும், பொருளில்லாதவர் கொடையை விரும்புதலும் தீயவென்பதாம்

வி-ரை. பொருளறிவா ரில்லாதவிடத்து ஒருவன் தான்பாடின பாட்டைச் சொல்லுதல் பயன்படாதாதலால் 'பொருளுணர்வா ரில்வழிப்பாட்டுரைத்த லின்னா' என்றும், இருண்ட சிறுவழியில் ஒருவன் தனியேபோதல் அவனுக்குத் தீமைபயக்குமாதலால், 'இருள்கூர் சிறுநெறிதான் றனிப்போக் கின்னா' என்றும், அன்பில்லாரிடத்திற்குச் சென்றால் அவர் அவமதித்தலால் மானக் கேடுண்டா மாதலால், 'அருளிலார் தங்கட் செலவின்னா' என்றும், பொருளிலாதவன் ஈகையைவிரும்புதல் இன்பந்தராதாதலால், 'பொருளிலார் வண்மை புரிவு இன்னா' என்றும் கூறினார். பாட்டு-கவி. கூர்தல்-மிகுதல். சிறுநெறி-நெருக்கமானவழி. போக்கு - தொழிற்பெயர் தங்கண் என்பதில் கண் ஏழனுருபு இடப்பொருட்டு. செலவு, புரிவு என்பன தொழிற்பெயர்கள். (கஅ)

உடம்பா டிலாத மனைவிதோ ளின்னா
விடனில் சிறியாரோ டியாத்தநண் பின்னா
விடங்களி யாளர் தொடர்பின்னா வின்னா
கடனுடையார் காணப் புகல்.

ப - ரை. உடம்பாடு இலாத - தன்னோடு பொருத்தமில்லாத, மனைவி - மனையாளது, தோள் - தோள்சேர்தல், இன்னா—; இடன் இல் - மனதில் விரிந்த இடமில்லாத, சிறியாரோடு - சிறியவரோடு, யாத்த நண்பு - பிணித்த நட்பானது, இன்னா—; விடம்-விடம்போன்ற, களியாளர் - கள்ளுண்டு களிப்பவரோடு, தொடர்பு - தொடர்சியுடைத்தாதல், இன்னா—; கடன் உடையார்-கடன் கொடுத்தவர், காண-பார்க்கும்படி, புகல்-(அவர்க்கெதிரே) செல்லுதல், இன்னா—, எ - று.

க - ரை. உடம்பாடில்லாத மனைவியைச் சேர்தலும், சிறுநெஞ்சரோடு நட்பும், களியரோடு சம்பந்தமும், கடன்கொடுத்தவர் கண்ணுக்கெதிரே செல்லுதலும் தீயவென்பதாம்.

வி - ரை. மனவொற்றுமை யில்லாத மனையாளைச் சேர்தலில் இன்பமில்லையாதலால் 'உடம்பாடிலாத மனைவிதோ ளின்னா' என்றும், சிறுமனத்தர் நட்புத் துன்பந்தருத லொருதலையாதலால் 'இடனில் சிறியாரோ டியாத்த நண்பின்னா' என்றும், களிகள் தொடர்பு தீமை பயக்குமென்ப துண்மையாதலால் 'விடங்களியாளர் தொடர் பின்னா' என்றும், கடன்தந்தவர்க் கெதிரே சென்றால் அவர் கடன் கொடுத்த பொருளைக்கேட்பதனால் துன்பம் விளையுமென்பதுபற்றி 'கடனுடையார் காணப் புகல் இன்னா' என்றும் கூறினார். உடம்பாடு - உடம்படுதல். மனைவியைப் புணர்தல் என்னாது மனைவிதோள் என்றது இடக்கரடக்கல்; இது தகுதி வழக்கு மூன்றனுளொன்று இது.

"நலக்குரியார் யாரெனி னாமநீர்வைப்பிற்
பிறர்க்குரியா டோடோயாதார்"

"தாம்வீழ்வார்மென்றோட் டுயிலினினிதுகொல்
தாமரைக்கண்ணானுலகு"

"தநநலம்பாரிப்பார் தோயார்தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார்தோள்"

"நிறைநெஞ்சமில்லவர் தோய்வர்பிறநெஞ்சிற்
பேணிப்புணர்பவர்தோள்".

"மெல்லியாடோள்சேர்".

என்றற்றொடக்கத் தான்றோர் செய்யுட்களா லினிது விளங்குதல் காண்க. இடன் இடம் என்பதன் போலி. (கஉ)

தலைதண்ட மாகச் சுரம் போதலின்னா
வலைசுமந் துண்பான் பெருமித மின்னா
புலையுள்ளி வாழ்த லுயிர்க்கின்னா வின்னா
முலையில்லாள் பெண்மை விழைவு.

ப-ரை. தலை தண்டம் ஆக-சிரச்சேதமாகும்படி,சுரம்போதல்-பாலைநிலத்திற்செல்லுதல்,இன்னா—;வலை சுமந்து-வலையைச்சுமந்து, உண்பான்-(அதனால்)உண்டுஉயிர்வாழ்வோனது, பெருமிதம்-செருக்கானது, இன்னா— ; புலை உள்ளி வாழ்தல் - புலாலுண்கை விரும்பி வாழ்தல், உயிர்க்கு-எல்லாவுயிர்களுக்கும்,இன்னா—;முலை இல்லாள்-முலையில்லாதவளாகிய ஒருமாது, பெண்மை - பெண்தன்மையை, விழைவு - விரும்புதல், இன்னா—, எ - று.

க-ரை. தலையிழக்கச் சுரத்திற் செல்லுதலும், வலைசுமந்து சீவனஞ்செய்பவனது பெருமிதமும், புலையை நினைத்து வாழ்தலும், முலையில்லாதவள் பெண்தன்மையை விரும்புதலும் தீயவென்பதாம்.

வி-ரை. மணித்தர் வழங்கரும் வெங்கொடும் பாலைவழி யேகல் தலையிழத்தற் கேதுவாதலால் 'தலைதண்டமாகச் சுரம்போதலின்னா' என்றும், இழிதொழிலாகிய வலைசுமத்தல் செய்வோன் செருக்குதல் அவனுக்குப் பிறரால் நகைக்கப்பட்டுத் தீமை தருதலால் 'வலைசுமந் துண்பான் பெருமித மின்னா'. என்றும், புலாலுணவு உடம்பு பருக்கைக் கேதுவாயினும் பாவமாய் உயிர்க்குத் தீமை பயத்தலால் 'புலையுள்ளி வாழ்த லுயிர்க்கின்னா'என்றும், தனமில்லா மாது தன்பெண்மைக்கனமடையாளாதலால் 'முலையிலாள் பெண்மை விழைவின்னா' என்றும், கூறினார். புலாலுணவு உடம்பு பெருக்கைக் கேதுவென்பது,

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூ னுண்பான்
எங்ஙன மாளு மருள்."

என்பதனாலும், தனமில்லா மாது பெண்மைக் கனமடையாளென்பது,

"கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று."

என்பதனாலும் உணர்க. (கடு)

மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்த லின்னா
துணிவில்லார் சொல்லுந் தறுகண்மை யின்னா
பணியாத மன்னர்ப் பணிவின்னா வின்னா
பிணியன்னார் வாழு மனை.

ப - ரை. மணி இல்லா - மணியை யணியாத, குஞ்சரம்-யானையை, வேந்து - அரசன், ஊர்தல் - மேற்கொண்டு செலுத்தல், இன்னா—, துணிவு இல்லார்-துணிவில்லாதவர்கள், சொல்லும்-சொல்லுகிற, தறுகண்மை - வீரவார்த்தைகள், இன்னா—, பணியாத மன்னர் - (முன்னே) வணங்காத மன்னரது, பணிவு - வணக்கமானது,

இன்னா—; பிணி அன்னார் - பிணிபோன்ற மனைவியர், வாழும்-வாழ்கின்ற, மனை - வீடானது, இன்னா—, எ - று.

க - ரை. மணியில்லாத யானை யேறுதலும், துணிவில்லாதவன் சொல்லும் வீரவார்த்தைகளும், பணியாத வேந்தர் பணிதலும், பிணி போலு மனைவியர் வாழும் வீடும் தீயவென்பதாம்.

வி - ரை. அரசன் தன் வருகையை முன்னே யறிவிக்குங் குறியாகிய மணியணியாத யானை யேறிவருதல் அழகன்றாதலால் 'மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்த லின்னா' என்றும், துணிவில்லாதவன் சொல்லும் வீரச்சொற்களாற் பயனிலவாதலால் 'துணிவில்லார் சொல்லுந் தறுகணமை யின்னா' என்றும், முன்பொருகாலமும் வணங்காத மன்னர் வணஙகுதல் தீமைகுறித்தாதலால் 'பணியாத மன்னர் பணிவின்னா' என்றும், கணவனது வழிபாட்டின் மனமில்லாத மனைவியர்வாழு மனையிலிருத்தல் துன்பமே யாதலால் 'பிணியன்னார் வாழு மனை யின்னா' என்றும் கூறினார். மணி-இருபக்கத்திலும் அசைந தொலித்துக்கொண்டு வரும்படி யானைக்குக் கட்டுமணி.

"வைந்நுதிபொருத வடுவாழ்வரிநுதல்
வாடாமாலையோடையொடுதயல்வரப்
படுமணியிரட்டு மருங்கிற்கடுநடைக்
கூற்றத்தன்னமாற்றரு மொய்ம்பிற்
கால்கிளர்ந்தன்னவேழம்".

என்ற மேலோர் வாக்கினாலும் யானையானது தெய்வத்தையேனும் அரசனையேனும் தாங்கிச்செல்லும்போது இருமருங்கு மசை யொலி மணி யணிந்தே வருத லழகென்பது விளஙகும். பணியாத மன்னர் பணிவின்னா என்றது,

"தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னார்
அழுதகண் ணீரு மனைத்து".

என்றதைக் கருதிப்போலும். (கக)

வணரொளியைம் பாலார் வஞ்சித்த லின்னா
துணர் தூங்கு மாவின் படுபழ மின்னா
புணர் பாவை யன்னார் பிரிவின்னா வின்னா
வுணர்வா ருணராக் கடை.

ப - ரை. வணர்-சுழற்சியையும், ஒளி-ஒளியையுமுடைய, ஐம்பாலார் - கூந்தலையுடைய மாதர், வஞ்சித்தல் - தம்கணவரை வஞ்சனை செய்தல், இன்னா—; துணர் - கொத்தாக, தூங்கும்-தொங்குகிற, மாவின் - மாமரத்தினின்று, படு - விழுகின்ற, பழம் - கனியானது, இன்னா—; புணர்-தம்மைப்புணர்ந்த, பாவை அன்னார்-பாவைபோல்வாராகிய மாதரது, பிரிவு - பிரிவானது, இன்னா—, உணர்வார் - அறியுந்தன்மையர், உணராக்கடை-அறியாராகிய விடத்தில், இன்னா—, எ - று.

க - ரை. மாதர் கணவரை வஞ்சித்தலும், விழுந்த மாங்கனியும், மாதரது பிரிவும், அறிபவர் அறியாமையும் தீயவென்பதாம்.

வி - ரை. மாதர் தம் கணவரைப் பேணாது வஞ்சிப்பாராயின் அதுபோலுந் துன்பம் அக்கணவர்க்கு வேறொன்றில்லை யாதலால் 'வணரொலி யைம்பாலார் வஞ்சித்த லின்னா' என்றும், சிக்கம் முதலியவற்றா லிறக்கப்பட்ட மாங்கனி சிறந்தாற்போலக் கனிந்து தானே நிலத்தில் விழுந்த கனி சிறவாமைபற்றி, 'துணர்தூங்கு மாவின் படுபழ மின்னா' என்றும், தாம் மணம்புணர்ந்த பாவைபோலழகுடையவராகிய மாதரை ஆடவர் பிரிதல் துன்பத்துக் கேதுவாதலால் 'புணர்பாவை யன்னார் பிரிவின்னா' என்றும், சொல்வதன் முன்பே குறிப்பினால் உட்கருத் தறியுந்தன்மையர் சொல்லியும் அறியாராயின், அது துன்பந் தருதல்பற்றி 'உணர்வா ருணராக்கடையின்னா' என்றும் கூறினார். வணர் - நெரிவு. ஐம்பால்-ஐந்து பகுப்பினையுடைய கூந்தல். ஐந்து பகுப்பாவன:-குழல், கொண்டை, சுருள், பனிச்சை, முடி, என்பன. இவற்றுள், மயிரைச் சுருட்டி முடித்தல்

குழல் என்றும், பக்கத்தின் முடித்தல் கொண்டையென்றும், பின்னே செருகல் சுருள் என்றும், பின்னி விடுதல் பனிச்சையென்றும், உச்சியிற் சேர்த்து முடித்தல் முடியென்றும் சொல்லப்படும். (கரு)

புல்லார் புரவி மணியின்றி யூர்வின்னா
கல்லா ருரைக்குங் கருமப் பொருளின்னா
வில்லாதார் நல்ல விருப்பின்னா வாங்கின்னா
பல்லாரு ணாணப் படல்.

ப-ரை. புல் ஆர்-புல்லை யுண்ணுகிற, புரவி-குதிரையை, மணி இன்றி-மணியில்லாமல், ஊர்வு-ஏறுதல், இன்னா—; கல்லார் உரைக்கும் - கல்வி கல்லாதவர் சொல்லுகிற, கருமப்பொருள் - காரியப் பயன், இன்னா—; இல்லாதார்-பொருளில்லாதவர், நல்ல - நல்லவை யாகிய தருமங்களை, விருப்பு - விரும்புதல், இன்னா—; ஆங்கு - அவ்வாறே, பல்லாருள் - பலர் நடுவே, நாணப்படல் - நாணப்படுதல், இன்னா—, எ - று.

க-ரை. மணியில்லாத குதிரையி லேறுதலும், கல்லாதார் சொல்லுங் காரியமும், வறியவன் நல்லவற்றை விரும்புதலும், பலரா லும் நாணப்படுதலும் தீயவென்பதாம்.

வி-ரை. மணியின்றி யேறுகுதிரைக் கழகில்லை யாதலால் 'புல்லார் புரவி மணியின்றி யூர்வின்னா' என்றும், கல்லாதார் அறிவின்மையாற் சொல்லுங் காரியங்கள் உறுதியைத்தாரா வாதலால் 'கல்லாதார் சொல்லுங் கருமப்பொரு ளின்னா' என்றும், உயர்ந்தபொருள்களைப் பொருளில்லாதவர் விரும்பின் அவை கிடையாமையாலுண்டாந் துன்ப மதிகமாதலால் 'இல்லாதார் நல்லவிருப்பின்னா' என்றும், பலர்க்கெதிரில் அவ்மானமடைந்து நாணுதல் மிகவுந் துன்பந் தருவதாதலால் 'பல்லாருணாணப் படல் இன்னா' என்றும் கூறினார். மணி-

இங்கிணி. ஊர்வு - தொழிற்பெயர். நல்ல என்பதற்கு நல்லவற்றைச் செய்ய விரும்புதல் எனினுமாம். (கசு)

உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா
கண்ணி லொருவன் வனப்பின்னா வாங்கின்னா
வெண்ணிலான் செய்யுங் கணக்கு.

ப-ரை. உண்ணாது வைக்கும் - தான் நுகராமல் வைக்கிற, பெரும்பொருள் - பெரும்பொருளை, வைப்பு-(புதைத்து) வைத்தல், இன்னா—; நண்ணா - மனம் பொருந்தாத, பகைவர் - பகைவரை, புணர்ச்சி - நட்டல், நனி - மிகவும், இன்னா—; கண் இல் ஒருவன் - கண்ணில்லாதவொருவனது, வனப்பு-அழகானது,இன்னா—; ஆங்கு-அவ்வாறே, எண் இல்லான்-ஆலோசனையில்லாதவன், செய்யும் கணக்கு-ஒருகாரியஞ்செய்ய எண்ணும் எண்ணங்கள், இன்னா—, எ-று.

க-ரை. உண்ணாமல் புதைத்துவைக்கும் பொருளும், மனப் பொருத்த மில்லாத பகைவரைச் சேர்தலும், கண்ணில்லாதவனது அழகும், ஆலோசனை யில்லாதவன் ஒருகாரியஞ்செய்ய எண்ணுத லும் தீயவென்பதாம்.

வி-ரை. தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் 'உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா' என்றும், பகைவருறவு தீங்கு பயத்தலால் 'நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா' என்றும், குருடனழகு தனக்கும் பிறர்க்கும் இன்பந் தாராமையால் 'கண்ணிலொருவன் வனப்பின்னா' என்றும், ஆலோசனை யில்லாதவன் செய்யுங் காரியம் பழுதுபடு மாதலால் 'எண்ணிலான் செய்யுங் கணக்கு இன்னா' என்றும் கூறினார். வைப்பு - தொழிற்பெயர். (கஎ)

ஆன்றவிந்த சான்றோருட் பேதை புகலின்னா
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா

நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா வாங்கின்னா
வீன்றாளை யோம்பா விடல்.

ப-ரை. ஆன்று - (கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களால்) நிறைந்து, அவிந்த - மனமடங்கப்பெற்ற, சான்றோருள் - பெரியோர் நடுவே, பேதை புகல் - அறிவிலானொருவன் பிரவேசித்தல், இன்னா—; மான்று - மயங்கி, இருண்ட போழ்தில் - இருண்ட காலத்தில், வழங்கல் - சஞ்சரித்தல், பெரிது இன்னா - மிகவும் துன்பந்தருவதாம்; நோன்று - பொறுத்து, அவிந்து வாழாதார்-மனமடங்கி வாழாதவர், நோன்பு - நோற்றல், இன்னா—; ஆங்கு - அவ்வாறே, ஈன்றாளை - பெற்ற தாயை, ஓம்பாது விடல்-காப்பாற்றாமற் கைவிடுதல், இன்னா—, எ - று.

க-ரை. பெரியோர் நடுவே பேதை புகுதலும், இருட்காலத்தில் சஞ்சரித்தலும், பொறுமை யில்லாதவரது நோன்பும், பெற்றதாயைக் காப்பாற்றாது விடுதலும் தீயவென்பதாம்.

வி-ரை. சான்றோர் நடுவில் அறிவிலியொருவன் புகுதல் இருதிறத்தார்க்குந் துன்பந்தருதலால் 'ஆன்றவிந்தசான்றோருட் பேதை புகலின்னா' என்றும்' சந்த்யாகாலத் திருளிற் சஞ்சரித்தல் துன்பத்துக் கேதுவாதலால் 'மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா' என்றும், பொறுமை யில்லாதவரது நோன்பு பலியாதாதலால் 'நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா' என்றும், பெற்ற தாயைக் காப்பாற்றாமைபோலப் பெரும்பாவம் வேறொன்றின்மையான் 'ஈன்றாளை யோம்பாவிடல் இன்னா' என்றும் கூறினார். ஆன்றவிந்த சான்றோருட் பேதைபுக லின்னா என்றதற்குதாரணம்:—

திருக்குறள்:

"கழாக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்
குழாத்துட் பேதை புகல்".

மான்று என்பதற்குப்பகுதி மால். பகலினிறுதியும் இரவின் முதலுமயங்குங் காலமாகிய சந்த்யாகாலத்தை 'மான்றிருண்டபோழ்து' என்றார். நோன்று என்பதற்குப் பகுதி நோல். நோன்பு - தவம். (கஅ)

உரனுடையா னுள்ள மடிந்திருத்த லின்னா
மறனுடை யாளுடையான் மார்பார்த்த லின்னா
சுரமரிய கானஞ் செலவின்னா வின்னா
மனவறி யாளர் தொடர்பு.

ப-ரை. உரன் உடையான் - அறிவுடையவன், உள்ளம் மடிந்திருத்தல் - மனமடிந்திருத்தல், இன்னா—; மறன் உடை - வீரத்தன்மையையுடைய, ஆள் உடையான் - ஆட்களை யுடையவன், மார்பு ஆர்த்தல் - மார்பைத்தட்டுதல், இன்னா—; சுரம் - சுரமாகிய, அரிய - செல்லுதற்கரிய, கானம் - காட்டில், செலவு - போதல், இன்னா—; மனம் வறியாளர் - மனவறுமை யுள்ளவரது, தொடர்பு - தொடர்ச்சியானது, இன்னா—, எ - று.

க-ரை. அறிவுடையவன் மனமடிந்திருத்தலும், வீரரை யுடையவன் மார்பைத் தட்டுதலும், சுரத்திற் செல்லுதலும், மனத்திருப்தி யில்லாதவரது நட்பும் தீயவென்பதாம்.

வி-ரை. அறிவுடையவன் அறிவிலான்போல மனமடிந்திருத்தல் தகாதாதலால் 'உரனுடையா னுள்ள மடிந்திருத்தலின்னா' என்றும், வீரரைத் தன்வசத்தி லுடையவன் அவர்களைக் கொண்டே எல்லா வெற்றிகளு மடையலாயிருக்க, தான் மார்தட்டுதல் மிகையாதலால் 'மறனுடை யாளுடையான் மார்பார்த்த லின்னா' என்றும், சுரத்திற் செல்லுதல் யாவர்க்குந் துன்பமே யாதலால் 'சுரமரிய கானஞ் செலவின்னா' என்றும், மனத்திருப்தி யில்லாதவர் தொடர்பால் ஒருகாலமும் இன்பமில்லையாதலால் 'மனவறியாளர் தொடர்பு

இன்னு' என்றும் கூறினர். உரம்-அறிவு; அது உரன்எனப் போலி யாயிற்று. (கக)

குலத்துப் பிறந்தவன் கல்லாமை யின்னு
நிலத்திட்ட நல்வித்து நாருமை யின்னு
நலத்தகையார் நாணுமை யின்னுவாங் கின்னு
கலத்தல் குலமில் வழி.

ப-ரை. குலத்து பிறந்தவன் - நற்குலத்திற் பிறந்தவன், கல்லாமை-கல்வி கல்லாதிருத்தல், இன்னு—; நிலத்து இட்ட - நிலத்தில் வித்தின, நல் வித்து - நல்ல வித்தானது, நாருமை - முளையாதொழிதல், இன்னு—; நலத்தகையார் - நல்ல அழகினை யுடையவராகிய மாதர், நாணுமை - நாணுதொழுகுதல், இன்னு—; ஆங்கு அவ்வாறே, குலம் இல்வழி கலத்தல் - குலமில்லாத வழியிற் சேர்தல், இன்னு—; எ - று.

க-ரை. நற்குலத்தில் பிறந்தவன், கல்லாதிருத்தலும், நல்ல நிலத்தில் விதைத்தவிதை முளையாமையும், அழகிய மாதர் நாணமின்றி யொழுகுதலும், குலமில்லாத வழியிற் கலத்தலும் தீயவென்பதாம்.

வி-ரை. நற்குலத்திற் பிறந்தவன் கல்வி கல்லாதிருத்தல் துன்பத்துக்கேதுவாதலால் 'குலத்துப்பிறந்தவன் கல்லாமையின்னு' என்றும், மண்ணிலிட்டவித்து முளையாதாயின் அதை யிட்டவனுக்குப் பெருந்துன்பந் தருமாதலால் 'நிலத்திட்ட நல்வித்து நாருமையின்னு' என்றும், நாணுதற்குரிய நற்குணமுடையார் நாணுராயின் அது துன்பத்துக் கேதுவாமாதலால் 'நலத்தகையார் நாணுமையின்னு'என்றும், முன்பின் கலவாத சந்ததியிற்கலத்தல் துன்பத்துக் கேதுவாதலால் 'கலத்தல் குலமில்வழி யின்னு' என்றும் கூறினர். கல்லாமையின்னு என மேல்வருதலால், குலம் நற்குலத்தைக் குறித்

தது. நாறுமை நாணுகம எதிர்மறைத் தொழிற்பெயர்கள். நாறுதல்-முளைத்தல். வழி - சந்ததி. (உ0)

மாரிநாட் கூவுங் குயிலின் குரலின்னா
வீரமி லாளர் கடுமொழிக் கூற்றின்னா
மாரி வளம்பொய்ப்பி னூர்க்கின்னா வாங்கின்னா
மூரி யெருத்தா லுழவு.

ப-ரை. மாரி நாள் - மழைகாலத்தில், கூவும் - கூவுகிற, குயிலின் குரல் - குயிற்குரலானது, இன்னா—; ஈரம் இல்லாளர் - அன்பில்லாதவரது, கடு மொழிகூற்று - வன்சொற்பகுதியானது, இன்னா—; மாரி-மழையானது, வளம் குன்றின்-தான்பெய்தலாகிய வளங்குறையுமாயின், ஊர்க்கு-உலகத்திலுள்ளார்க்கு, இன்னா—; ஆங்கு - அவ்வாறே, மூரி எருத்தால் - முதிர்ந்த எருதைக்கொண்டு, உழவு - உழுதல், இன்னா—, எ-று.

க-ரை. மழைநாளில் கூவும் குயிற்குரலும், அன்பில்லாதவர் கூறும் கடுஞ்சொல்லும், ஊர்க்குமழைபெய்யாதிருத்தலும், கிழமாட்டைக் கட்டி யுழுதலும் தீயவென்பதாம்.

வி-ரை. குயிற்குரல்வெயிற்காலத்தன்றி மழைகாலத்தில் இன்பந் தராதாதலால் 'மாரிநாட் கூவுங் குயிலின் குரல் இன்னா' என்றும், அன்பில்லாதவர் சொல்லும் வன்சொல் துன்பந் தருமாதலால் 'ஈரமிலாளர் கடுமொழிக் கூற்றின்னா' என்றும், மழைபெய்யாதாயின் உலகத்துக் கின்பமென்பது சிறிதுமில்லை யாதலால் 'மாரிவளம் பொய்ப்பினூர்க் கின்னா' என்றும், கிழமாட்டைக் கொண்டுழுதலால் மிகுபயன் தராமையால் 'மூரியெருத்தா லுழவு இன்னா' என்றும் கூறினார். (உக)

ஈத்த வகையா லுவவாதார்க் கீப்பின்னா
பாத்துணை யில்லா ருழைச்சென் றுணவின்னா

மூத்த விடத்துப் பிணியின்னா வாங்கின்னா
வோத்திலாப் பார்ப்பா னுரை.

ப-ரை. ஈத்தவகையால் - கொடுத்தவளவைக்கொண்டு, உவவா தார்க்கு - சந்தோஷிக்காதவர்க்கு, ஈப்பு - கொடுத்தல், இன்னா—; பாத்து - பகிர்ந்து, உணவு - உண்ணுதல், இல்லார் உழை - இல்லா தவரிடத்து, சென்று - போய், உணவு - உண்ணுதல், இன்னா—; மூத்த இடத்து - வயதுமுதிர்ந்தகாலத்தில், பிணி-நோயுண்டாதல், இன்னா—; ஆங்கு - அவ்வாறே, ஒத்து இல்லா - வேதாத்தியயநமில் லாத, பார்ப்பான் உரை-அந்தணன் சொல்லானது, இன்னா—,எ-று.

க-ரை. பெற்றவளவில் மனமகிழாதவனுக்குக் கொடுத்தலும், பகிர்ந் துண்ணாதவரிடத்துச் சென்றுண்ணுதலும், முதுமைப்பரு வத்தில் நோயும், வேதாத்தியயந மில்லாத பார்ப்பானது சொல்லும் தீயவென்பதாம்.

வி-ரை. மனத்திருப்தி யில்லாதவர்களுக்குக் கொடுத்தலாற் பய னில்லை யாதலால் 'ஈத்த வகையா லுவவாதார்க் கீப்பின்னா' என் றும், பகிர்ந்துண்ணாத பாவிகளிடத் துண்பது பாவமாதலால் 'பாத் துண வில்லா ருழைச்சென் றுணவின்னா' என்றும், முதுமைப்பரு வத்திற் பிணி மிகு துன்பஞ் செய்யுமாதலால் 'மூத்தவிடத்துப் பிணி யின்னா' என்றும், வேதமோதாத பார்ப்பான் சொல் பயனற்றதாத லால் 'ஒத்திலாப் பார்ப்பா னுரை இன்னா' என்றுங் கூறினார். ஒத்து-வேதம். (உஉ)

யானையின் மன்னரைக் காண்ட னனியின்னா
ஊனைத்தின் றூனைப் பெருக்குதல் முன்னின்னா
தேனெய் புளிப்பிற் சுவையின்னா வின்னா
கான்யா றிடையிட்ட வூர்.

ப-ரை. யானை இல் - யானைப்படையை யுடையரல்லாத, மன்னரை - அரசரை, காண்டல் - காணுதல், நனி - மிகவும், இன்னா—; ஊனை தின்று - (பிறிதோ ருடம்பி னூனைத்) தின்று, ஊனை பெருக்குதல் - தன்னூனைப் பெருக்குதல், முன் இன்னா - மிகவு மின்னா—; தேன் நெய் புளிப்பின்-தேன் நெய் என்பன புளிக்குமாயின், சுவை- அந்த இன் புளிப்பாகிய சுவையானது, இன்னா—; கான்யாறு-காட்டாற்றின், இடையிட்ட ஊர் - இடையி லுண்டாக்கப்பட்ட வூரானது, இன்னா—; எ-று.

க-ரை. யானைப்படையில்லாத அரசரைப் பார்த்தலும், மாமிசத்தைத் தின்று மாமிசத்தைப் பெருக்குதலும், தேன் நெய் என்பன புளித்தலும், காட்டாற்றினிடையிட்ட வூரும் தீயவென்பதாம்.

வி-ரை. யானைப்படை நால்வகைப் படையுள்ளுஞ் சிறந்ததாதலாலும், அதனையுடைய னல்லாத ராஜதரிசநம் பயனற்ற தாதலாலும் 'யானையின் மன்னரைக் காண்ட னனியின்னா' என்றும், புலாலுண்டல் மிகுபாவமாதலால் 'ஊனைத்தின் றூனைப் பெருக்குதல் முன்னின்னா' என்றும், தேன் நெய் என்பவை புளித்தால் அவை நஞ்சுக்குச் சமமாதலாற் 'தேனெய் புளிப்பிற் சுவையின்னா' என்றும், காட்டாற்றின் பெருக்குக் கெதிரேயிருக்கு மூருக்கு எக்காலத்தும் அபாயமே யாதலால் 'கான்யா றிடையிட்ட வூர் இன்னா' என்றும் கூறினார். (உ௩)

சிறையில்லா மூதூரின் வாயில்காப் பின்னா
துறையிருந் தாடை கழுவுத லின்னா
வறைபறை யாயவர் சொல்லின்னா வின்னா
நிறையில்லான் கொண்ட தவம்.

ப-ரை. சிறை இல்லா - மதிலில்லாத, மூதூரின் - பழைய வூரினது, வாயில் - வாயிலை, காப்பு - காவல் செய்தல், இன்னா—

துறை இருந்து - நீர்த்துறையின்கண்ணிருந்துகொண்டு, ஆடைகழுவுதல் - ஆடை தோய்த்தல், இன்னா—; அறை - ஒலிக்கிற, பறை ஆயவர் - பறைபோன்றவரது, சொல் - சொற்கள், இன்னா—; நிறை இல்லான் - ஐம்பொறிகளைத் தடுக்கும் வலியில்லாதவன், கொண்ட- எடுத்துக்கொண்ட, தவம் - தவமானது, இன்னா—, எ-று.

க-ரை. மதிலில்லாதவூரின்வாயில்காத்தலும், தண்ணீர்த்துறையில் ஆடைதோய்த்தலும், பறையன்னவர் வாய்ச்சொல்லும், ஐம்பொறி வெற்றியில்லாதவன் மேற்கொண்ட தவமும் தீயவென்பதாம்.

வி-ரை. மதிலில்லாத வூரில் வாயில் காப்பதனாற் பயனில்லையாதலால் 'சிறையில்லா மூதூரின் வாயில் காப்பின்னா' என்றும், தண்ணீர்த்துறையில் புடைவை தோய்த்தல் யாவரும் அருவருத்தற்கேதுவாதலாலும், மிகுபாவமாதலாலும் 'துறையிருந் தாடை கழுவு தலின்னா' என்றும், வாயடக்கமில்லாதவருடையசொல் துன்பந் தருவதாதலால் 'அறைபறையாயவர் சொல்லின்னா' என்றும், இந்திரிய நிக்கிரகமில்லாதவன் மேற்கொண்ட தவம் நிறைவேறாதாதலால் 'நிறையில்லான் கொண்ட தவம் இன்னா' என்றும் கூறினார். காப்பு - தொழிற்பெயர். நிறை - தொழிற்பெயர். நிறுத்தலென்பது பொருள்; அதாவது பொறிகளைப் புலன்கள் மேற்செல்லாது தடுத்தல். (௨௯)

ஏமமில் மூதூ ரிருத்தன் மிகவின்னா
தீமை யுடையா ரயலிருத்த னன்கின்னா
காமமுதிரி னுயிர்க்கின்னா வாங்கின்னா
யாமென் பவரோடு நட்பு.

ப-ரை. ஏமம் இல்-காவலில்லாத, மூதூர்-பழையவூரில், இருத்தல்-வாழ்தல், மிக -மிகவும், இன்னா—; தீமை உடையார்-பொல்

லாங் குடையவரது, அயல் இருத்தல்-பக்கத்திலிருத்தல், நன்கு-மிகவும், இன்னா—; காமம் முதிரின் - காமநோய் மிகுந்தால், உயிர்க்கு-தன்னுயிர்க்கு, இன்னா—; ஆங்கு-அவ்வாறே, யாம் என்பவரொடு-யாமென்று அகங்கரிப்பவரோடு செய்த, நட்பு-நட்பானது, இன்னா—, எ-று.

க-ரை. காவலில்லாத ஊரிலிருத்தலும், தீயவரயலி லிருத்தலும், காமமுதிர்தலும், அகங்காரிகளோடு நட்பும் தீயவென்பதாம்.

வி-ரை. காவலில்லாத ஊரிலிருத்தல் அபாயத்துக் கேதுவாதலால் 'எமமின் மூதா ரிருத்தல் மிகவின்னா' என்றும், தீயவர் அயலிலிருத்தலும் தீதாதலால் 'தீமை யுடையா ரயலிருத்த னன்கின்னா' என்றும், அளவுகடந்த காமம் உடற்கேயன்றி உயிருக்குந் தீங்கு விளைத்தலால் 'காமமுதிரி னுயிர்க் கின்னா' என்றும், அகங்காரிகளுடைய நட்புக் கேட்டிற் கேதுவாதலால் 'யாமென்பவரோடு நட்பு இன்னா' என்றும் கூறினார். தீமையுடையா ரயலிருத்த லின்னாவென்றவிடத்து, அவரோடு கூடியிருத்தல் இன்னாவென்பது சொல்லாதே விளங்கும். (உரு)

நட்டா ரிடுக்கண்கள் காண்ட னனியின்னா
வொட்டார் பெருமிதங் காண்டல் பெரிதின்னா
கட்டில்லா மூதா ருறையின்னா வாங்கின்னா
நட்டக வற்றினாற் சூது.

ப-ரை. நட்டார்-நட்டவரது, இடுக்கண்கள்-துன்பங்களை, காண்டல்-காணுதல், நனி-மிகவும், இன்னா—; ஒட்டார்-பகைவருடைய, பெருமிதம்-செருக்கை, காண்டல் - காணுதல், பெரிது - மிகவும், இன்னா—; கட்டு இல்லா-கட்டுப்பாடில்லாத, மூதூர்-பழையவூரில், உறை-வாழ்தல், இன்னா—; ஆங்கு - அவ்வாறே, நட்ட-நட்பட்ட, கவற்றினால்-கவற்றினாலாடுகின்ற, சூது-சூதாட்டமானது, இன்னா-, எ-று.

க-ரை. நட்டாரது துன்பத்தைப் பார்த்தலும், பகைவரது பெருமிதத்தைப் பார்த்தலும், கட்டுப்பாடில்லாத ஊரில் வாழ்தலும், சூதாடுதலும் தீயவென்பதாம்.

வி-ரை. நட்டாரது துன்பங் கண்டுழி விரைந்து அதனை நீக்க முயலாது பார்த்திருத்தல் மிகுபாவமாதலால் 'நட்டா ரிடுக்கண் கள் காண்ட னனியின்னு' என்றும், பகைவரது செருக்கைக் கண்டால் மனம்பதைக்கு மாதலால் 'ஒட்டார் பெருமிதங் காண்டல் பெரிதின்னு' என்றும், கட்டுப்பா டில்லாத ஊரிலிருப்பின், நீதி கிடைப்ப தரிதாதலால் 'கட்டில்லா மூதூ ருறையின்னு' என்றும், சூதாட்டம் கெடுதிக்கெல்லாம் பிறப்பிடமாதலால் 'நட்ட கவற்றி னாற் சூது இன்னு' என்றும் கூறினார். கவறு-தாயக்கட்டை. (உசு)

பெரியாரோ டியாத்த தொடர்விடுத லின்னு
வரியவை செய்து மெனவுரைத்த லின்னு
பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னு வின்னு
பெரியார்க்குத் தீய செயல்.

ப-ரை. பெரியாரோடு - பெரியவருடன், யாத்த - பிணித்த, தொடர்-தொடர்பை, விடுதல்-விடுதலானது, இன்னு—; அரியவை - தம்மாற் செய்தலருமையான காரியங்களை, செய்தும் என உரைத்தல்-செய்வோமென்று சொல்லுதல், இன்னு—; பரியார்க்கு-தம்மிடத் திரக்கஞ் செய்யாதவர்க்கு, தாம் உற்ற - தாமடைந்த துன்பங்களை, கூற்று-சொல்லுதல், இன்னு—; பெரியார்க்கு-பெரியோர்க்கு, தீய செயல்-தீமைசெய்தல், இன்னு—; எ-று.

க-ரை. பெரியார் தொடர்ச்சியை விடுதலும், செய்தற் கரியவற்றைச் செய்வோமென்று சொல்லுதலும், அன்பில்லாதவர்க்குத் தாமடைந்த துன்பத்தைச் சொல்லுதலும், பெரியோர்க்குத் தீயவை செய்தலும் தீயவென்பதாம்.

வி-ரை. பெரியார் தொடர்பு விடுதல் மிகுதியுந் துன்பத்திற் கேதுவாதலால் 'பெரியாரோ டியாத்த தொடர்விடுத லின்னா' என்றுங், செய்தற் கரியவற்றைச் செய்வோமென்று சொல்லி அவை முடியாமையால் அவமானப்படுதல் மிகு துன்பமாதலால்'அரியவை செய்து மெனவுரைத்த லின்னா'என்றும், தம்மிடத் திரக்கமில்லாதவர்க்குத் தமது துன்பங்களைச் சொல்லிக்கொள்ளுதல் மிகவும் பயனில்செயலும் இழிவுமாதலால் 'பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னா' என்றும், பெரியோருக்குத் தீங்கு செய்தல் தமக்கே தீங்கு பயக்குமாதலால் 'பெரியார்க்குத் தீமை செயல் இன்னா' என்றுங்கூறினார். பெரியாரோடியாத்த தொடர்விடுத லின்னா, என்பதற்குதாரணம்:— திருக்குறள்: "பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே, நல்லார் தொடர்கை விடல்" யாத்தல்-பிணித்தல். பரிதல் - இரங்குதல். கூற்று - தொழிற்பெயர்; கூறுதல் என்பது பொருள். (உஎ)

பெருமை யுடையாரைப் பீடழித்த லின்னா
கிழமை யுடையார்க் களைந்திடுத லின்னா
வளமை யிலாளர் வனப்பின்னா வின்னா
விளமையுண் மூப்புப் புகல்.

ப-ரை. பெருமை உடையாரை - பெருமையுடையவரை, பீடு அழித்தல்-பெருமையழியச்செய்தல், இன்னா—; கிழமை உடையார்- உரிமையுடையவரை, களைந்திடுதல் - கெடுத்துவிடுதல், இன்னா—; வளமை இல்லாளர் - செல்வ மில்லாதவருடைய, வனப்பு - அழகானது, இன்னா—; இளமையுள் - இளமைப்பருவத்தில், மூப்பு புகல் - முதுமைப் பருவத் துண்டாவனவாகிய நோய்க ளுண்டாதல், இன்னா—; எ-று.

க-ரை. பெருமை யுடையவரைப் பெருமைகெடச் செய்தலும், உரிமை யுடையவரை விலக்கிவிடுதலும், செல்வ மில்லாதவரது அழகும், இளமையில் நோய்களுண்டாதலும் தீயவென்பதாம்.

வி-ரை. பெருமை யுடையவரைப் பெருமைகுறைத்தல் பாவ மாதலால் 'பெருமை யுடையாரைப் பீடழித்த லின்னா' என்றும், உரியாரை உரியாரல்லரென்றல் அரியாயமாதலால் 'கிழமையுடையா ர்க் களைந்திடுத லின்னா' என்றும், செல்வ மில்லாதவரது அழகு பயன்படுத லின்மையால் 'வளமையிலாளர் வனப்பின்னா' என்றும், முதுமையி லுண்டாதற் குரியநோய்கள் இளமையி லுண்டாமாயின் அதுபோன்ற துன்பம் வேறொன்று மில்லையாதலால் 'இளமையுண் மூப்புப்புகல் இன்னா' என்றும் கூறினார். உண்டாத லருமை தோ ன்ற 'புகல்' என்றார். (௪.அ)

கல்லாதா னூருங் கலிமாப் பரிப்பின்னா
வல்லாதான் சொல்லு முரையின் பயனின்னா
வில்லார்வாய்ச் சொல்லி னயமின்னா வாங்கின்னா
கல்லாதான் கோட்டி கொளல்.

ப-ரை. கல்லாதான் ஊரும் - கல்லாதவன் ஏறி நடத்துகிற, கலி - ஆரவாரத்தையுடைய, மா - யானையானது, பரிப்பு-(அவனைச்) சுமந்து செல்லுதல், இன்னா—; வல்லாதான் சொல்லும்-செய்யமாட் டாதான் சொல்லுகிற, உரையின் பயன்-சொல்லின் பொருளானது, இன்னா—; இல்லார் வாய் - பொருளில்லாதவர் வாயிலுண்டாகிற, சொல்லின் - சொல்லினது, நயம்-நன்மையானது, இன்னா—; ஆங்கு- அவ்வாறே, கல்லாதான்-கல்விகற்காத ஒருவன், கோட்டி கொளல்- ஆரவாரித்தல், இன்னா—; எ-று.

க-ரை. கல்லாதவ னேறிநடத்துகிற மாவின் செலவும், செய்ய மாட்டாதான் சொல்லும் சொற்பொருளும், இல்லாதவன் சொல் லும் நற்சொல்லும், கல்லாதவன் சபையி லொன்றைச்சொல்ல நினை த்தலும் தீயவென்பதாம்.

வி-ரை. யானை நடத்தும் வகை யறியாதவனை யானைசுமத்தல் தீதாதலால் 'கல்லாதா னூருங் கலிமாப் பரிப்பின்னா' என்றும், செய்யமாட்டாதவன் செய்வேனென்று சொல்லுதல் பயனில்சொல் லாதலால் 'வல்லாதான் சொல்லு முரையின் பயனின்னா' என்றும், பொருளில்லார் சொல்லுஞ் சொல் செல்லாதாதலால் 'இல்லார் வாய்ச்சொல்லி னயமின்னா' என்றும், கல்வி கல்லாதவன் சபையிற் பேசத்துணிதல் அவனுக்கு அவமானத்தை விளைக்குமாதலால் 'கல் லாதான் கோட்டி கொளலின்னா' என்றும் கூறினார். ஊர்தல் - ஏறிநடத்துதல். (உசு)

குறியறியான் மாநாக மாட்டுவித்த லின்னா
தறிவறியா னீரின்கட் பாய்ந்தாட லின்னா
வறிவறியா மக்கட் பெறலின்னா வின்னா
செறிவிலான் கேட்ட மறை.

ப-ரை. குறி அறியான் - அடக்குமுறை யறியாதவன், மா நாகம் - பெரிய சர்ப்பங்களை, ஆட்டுவித்தல் - ஆடச் செய்தல், இன்னா—; அறிவு அறியான்-அறியவேண்டுவதாகிய நீந்துதலை அறியாதவன், நீரின்கண் - நீரினிடத்தில், பாய்ந்து ஆடல் - குதித்து விளையாடுதல், இன்னா—; அறிவு - அறிய வேண்டியவற்றை, அறியா - அறியாத, மக்கள் பெறல் - மக்களைப்பெறுதல், இன்னா—; செறிவு இல்லான் - அடக்க மில்லாதவன், கேட்ட மறை - கேட்ட இரகசியம், இன்னா—; எ-று.

க-ரை. அடக்குமுறை யறியாதவன் பாம்பைப்பிடித் தாட்டுதலும், நீந்த வறியாதவன் நீரிற் பாய்ந்து விளையாடுதலும், அறிய வேண்டியவற்றை யறியாத மக்களைப் பெறுதலும், அடக்கமில்லாதவன் கேட்ட ரகசியங்களும் தீயவென்பதாம்.

வி-ரை. மந்திரம் முதலிய முறையறியாதவன் பாம்பைப்பிடித் தாட்டுதல் அவனுக்கு மரணஹேதுவாதலால் 'குறியறியான் மாநாக

மாட்டுவித்த லின்னா' என்றும், நீந்த அறியாதவன் நீர்விளையாடுதல் அவனுயிர்க் கிறுதிபயக்கு மாதலால் 'அறிவறியா னீரின்கட் பாய்ந் தாட லின்னா' என்றும், அறியவேண்டுவனவாகிய புருடார்த்தங்களை யறியாத மக்களைப் பெறுதல் மிகுதிபாகிய பாவப்பயனாதலால் 'அறி வறியாமக்கட் பெறலின்னா' என்றும், அடக்கமில்லாதவன் கேட்ட ரகசியம் உடனே பலரறிய வெளிப்படுமாதலால், 'செறிவிலான் கே ட்ட மறை யின்னா' என்றும் கூறினார். குறி - பாம்பின் குறிமுதலிய வை யெனினுமாம். (௩0)

நெடுமர நீள்கோட் டுயர்பாய்த லின்னா
கடுஞ்சின வேழத் தெதிர்சேற லின்னா
வொடுங்கி யரவுறையு மில்லின்னா வின்னா
கடும்புலி வாழு மதர்.

ப-ரை. நெடு மரம் - நெடிய மரத்தினது, நீள் கோட்டு - நீண்ட கிளையின், உயர் - உயரத்திலிருந்து, பாய்தல் - கீழே குதித்தல், இன்னா—; கடு சினம் - கொடிய கோபத்தையுடைய, வேழத்து - யானையின், எதிர் சேறல் - எதிரே செல்லுதல், இன்னா—; அரவு - பாம்பானது, ஒடுங்கி - அடங்கி, உறையும் - வாழ்கின்ற, இல்-வீடா னது, இன்னா—; கடும்புலி வாழும் - கடுமையாகிய புலிகள் வாழ் கின்ற, அதர் - வழியானது, இன்னா—, எ - று.

க-ரை. நீண்ட மரத்தின் நீள்கொம்பிலிருந்து நிலத்திற் குதித் தலும், கடுங்கோவத்தையுடைய யானைக்கெதிரே செல்லுதலும், பாம்புவாழும் வீட்டில் வாழ்தலும், கடும்புலிகள் வாழும் வழியும் தீய வென்பதாம்.

வி-ரை. நீண்ட மரக்கிளையிலிருந்து நிலத்திற் குதித்தால், கால்கைகள் ஒடிய நேரிடுமாதலால் 'நெடுமர நீள்கோட் டுயர்பாய்த லின்னா' என்றும், கொடுங்கோவத்தையுடைய யானை எதிர்ப்பட்ட

வரைக் கொல்லுதல் திண்ணமாதலால் 'கடுஞ்சின வேழத் தெதிர் சேற லின்னா' என்றும், பாம்புவாழும் மனையிலிருத்தல் எப்பொழு தும் அபாயத்துக்கே யேதுவாதலால் 'ஒடுங்கி யரவுறையு மில்லின் னா' என்றும், புலிகள் சஞ்சரிக்கும் காட்டுவழியிற் செல்லுதல் உயிர்க் கிறுதி பயக்கு மாதலால் 'கடும்புலி வாழு மதர் இன்னா' என்றும் கூறினார். சேறல் - செல்தல். (௩௧)

பண்ணமையா யாழின்கீழ்ப் பாடல் பெரிதின்னா
வெண்ணறியா மாந்த ரொழுக்குநாட் கூற்றின்னா
மண்ணின் முழவி னொலியின்னா வாங்கின்னா
தண்மை யிலாளர் பகை.

ப-ரை. பண் அமையா - பண்ணுதலமைந்திராத, யாழின் கீழ்-யாழின்கீழிருந்து, பாடல் - பாடுதல், பெரிது - மிகவும், இன்னா—; எண் அறியா - கணிதமறியாத, மாந்தர் - மக்கள், ஒழுக்கு - நடத்து கிற, நாள்கூற்று-நாள்செலவு, இன்னா—; மண் இல் - மண்ணுதலில் லாத, முழவின் -மத்தளத்தின், ஒலி-ஓசையானது, இன்னா—; ஆங்கு-அவ்வாறே, தண்மை இலாளர் - குணமில்லாதவரோடு, பகை-பகை கொள்ளுதல், இன்னா—; எ-று.

க-ரை. பண்ணமையாத யாழின்கீழ்ப்பாடுதலும், கணிதமறியாத மக்களது நாட்செலவும், மண்ணுதலில்லாத மத்தளத்தி னோசையும், நற்குண மில்லாதவரது பகையும் தீயவென்பதாம்.

வி-ரை. பண்ணமையா யாழின் கீழ்ப் பாடுதல் சிறந்துகாட்டா தாதலால் 'பண்ணமையா யாழின்கீழ்ப் பாடல் பெரிதின்னா' என் றும், கணிதமறியாதவர் நாள்பார்த் தமைத்தல் பழுதாதலால் 'எண் ணறியா மாந்த ரொழுக்குநாட் கூற்றின்னா' என்றும், மார்ச்சனையில் லாத மத்தளத்தோசை இன்பந்தரா தாதலால் 'மண்ணின் முழவி னொலி யின்னா' என்றும், துர்ஜநரோடு பகைகொள்ளின் அது

தீமைசெய்தல் தவறாதாதலால் 'தண்மை யிலாளர் பகைஇன்னா' என்றும் கூறினார். பண் - இசையெனினுமாம். பாடல் - குரலாற் பாடுதல். எண் - சோதிட நூல் எனினுமாம். மண் - மார்ஜனை. தண்மை - தட்பம், (சாந்தகுணம்). (௩௨)

தன்னைத்தான் போற்றா தொழுகு தனன்கின்னா
முன்னை யுரையார் புறமொழிக் கூற்றின்னா
நன்மையி லாளர் தொடர்பின்னா வாங்கின்னா
தொன்மை யுடையார் கெடல்.

ப-ரை. தன்னை(-ஒருவன்) தன்னை, தான்-தானே, போற்றாது ஒழுகுதல் - காத்துக்கொள்ளாமல் நடத்தல், நன்கு - மிகவும், இன்னா—; முன்னை - ஒருவனெதிரே, உரையார் - சொல்லாதவராய், புறமொழி கூற்று - புறங்கூறுதல், இன்னா—; நன்மை இலாளர் - நற்குண மில்லாதவரது, தொடர்பு - நட்பு, இன்னா—; ஆங்கு - அவ்வாறே, தொன்மை உடையார் - பழமையுடையவர், கெடல் - கெடுதல், இன்னா—; எ - று.

க-ரை. தன்னைத்தான் காத்துக்கொள்ளாமல் நடத்தலும், எதிரேபேசாதிருந்து புறத்தே பேசுதலும், நற்குண மில்லாதவரது தொடர்ச்சியும், பழமையாகிய நற்குடியிற் பிறந்தவரது அழிவும் தீயவென்பதாம்.

வி-ரை. தன்னைத்தான் காத்துக்கொள்ளாமல் ஒழுகுதல் தனக்குக் கேடு தருதல் ஒருதலையாதலால் 'தன்னைத்தான் போற்றா தொழுகுத னன்கின்னா' என்றும், புறங்கூறல் பெரும்பாவ மாதலால் 'முன்னை யுரையார் புறமொழிக் கூற்றின்னா' என்றும், தீயார் நட்புத் தீங்கு பயத்தலால் 'நன்மையி லாளர் தொடர்பின்னா' என்றும், செல்வக்குடியிற் பிறந்தவரது கேடானது எல்லாரு மிரங்குதற்குரிய துன்பந்தருமாதலால் 'தொன்மையுடையார் கெடல் இன்னா' என்றும் கூறினார். தன்னைத்தான் போற்றா தொழுகுதலாவது, மனமொழி மெய்களால் தனக்குத் தீங்கு நேரிடும்படி யொழுகுதல். ()

கள்ளுண்பான் கூறுங் கருமப் பொருளின்னா
முள்ளுடைக் காட்டி னடத்த னனியின்னா

வெள்ளம் படுமாக் கொலையின்னா வாங்கின்னா
கள்ள மனத்தார் தொடர்பு.

ப-ரை. கள் உண்பான் - கள்ளுண்பவனொருவன், கூறும் - சொல்லுகிற, கருமப்பொருள் - சொற்பொருளானது, இன்னா—; முள் உடை காட்டில் - முள்ளுள்ள காட்டில், நடத்தல் - நடத்தலானது, னனி - மிகவும், இன்னா—; வெள்ளம் படும் - நீர்ப்பெருக்கி லகப்பட்ட, மா - மிருகத்தை, கொலை - கொல்லுதல், இன்னா—; ஆங்கு - அவ்வாறே, கள்ள மனத்தார் - வஞ்சமனத்தாரது, தொடர்பு - நட்பானது, இன்னா—; எ - று.

க-ரை. கள்ளுண்பவன் சொல்லுஞ் சொற்பொருளும், முள்ளுள்ள காட்டில் நடத்தலும், வெள்ளத்தி லகப்பட்ட மிருகத்தைக் கொல்லுதலும், வஞ்சமனத்தாரது தொடர்பும் தீயவென்பதாம்.

வி-ரை. களியன் சொல்லுஞ்சொல் கட்செருக்கோடு கூடியதாதலால் 'கள்ளுண்பான் கூறுங் கருமப்பொருளின்னா' என்றும், முட்காட்டில் நடக்கில் காலின முட்டைத்தல் முதலிய அநேக துன்பங்களுளவா மாதலால் 'முள்ளுடைக் காட்டி னடத்த னனியின்னா' என்றும், நொந்தாரை நோவுவிப்பதுபோல, முன்னமே வெள்ளத்தாலலைக்கப்பட்ட மிருகத்தைக் கொல்லுதல் மகாபாதகமாதலால் 'வெள்ளம் படுமாக்கொலையின்னா' என்றும், வஞ்சமனத்தார் நட்புத் தீமை தருதலில் முற்பட்டதாதலால் 'கள்ள மனத்தார்தொடர்பு இன்னா' என்றும் கூறினார். மா-மிருகத்தின் பொதுப்பெயர். கொலை-தொழிற்பெயர். (௩௨)

ஒழுக்க மிலாளர்க் குறவுரைத்த லின்னா
இழித்தகு நூலும் விழையாதார்க் கின்னா
விழித்த தொழிலவர் நட்பின்னா வின்னா
கழிப்புலாய் மாடிலங் கொட்பு.

ப-ரை. ஒழுக்கம் இலாளர்க்கு - நல்லொழுக்க மில்லாதவர்களுக்கு, உறவு உரைத்தல் - தொடர்பைச் சொல்லுதல், இன்னா—; இழித்தகும் நூலும் - சிறுநூல்களும், விழையாதார்க்கு - விரும்பா

தவர்க்கு, இன்னா—; இழிக்க - (கண்டார்) இழிக்கச் சொல்லுதற் குரிய, தொழிலவர் - தொழிலுடையவரது, நட்பு - நட்பானது, இன்னா—; கழிப்பு உலாய் - (வெறுத்துக்) கழித்தற் குரியதாகிய, மண்டிலம் - குதிரையினது, கொட்பு - சுழன்றோடுதல், இன்னா—; எ-று.

க-ரை. ஒழுக்கமில்லாதவர்க்கு உறவுசொல்லுதலும், சிறுநூல்களையும் விரும்பாதவர்க்குச் சொல்லுதலும், இழிதொழிலாளரது நட்பும், குதிரையின் சுற்றோட்டமும் தீயவென்பதாம்.

வி-ரை. தீயொழுக்க முடையார்க்குத் தொடர்புகூறல் தீமையைத் தருமாதலால் 'ஒழுக்க மிலாளர்க் குறவுரைத்த லின்னா' என்றும், விருப்ப மில்லாதவர்க்குச் சிறுநூல்களைக் கற்கையுந் துன்பமாதலால் 'இழித்தகு நூலும் விழையாதார்க் கின்னா' என்றும், இழிதொழிலாளர் நட்புத் தீமை செய்தலால் 'இழிக்கத் தொழிலவர் நட்பின்னா' என்றும், நேரோட்டமின்றிச் சுழன்றோடுதல் என்றும் குதிரைக்குத் துன்பமாதலால் 'கழிப்புலாய மண்டிலக் கொட்பு இன்னா' என்றும் கூறினார். கழிப்புலாய் மண்டிலக் கொட்பு என்பதற்கு, நல்லவரால் கழிக்கப்பட்ட நாடுகளில் சென்று திரிதல் என்றுரைத்தலுமொன்று. (௩௫)

எழிலி யுறைநீங்கி னீண்டையார்க் கின்னா
குழலி னினிய மரத்தோசை நன்கின்னா
குழவிக ளுற்ற பிணியின்னா வின்னா
வழகுடையான் பேதை யெனல்.

ப-ரை. எழிலி - மேகமானது, உறை நீங்கின் - நீர்த்துளித்தலொழியுமாயின், ஈண்டையார்க்கு - இவ்வுலகத்தார்க்கு, இன்னா—; குழலின் இனிய - குழலினும் இனிய, மரத்து ஓசை - மரத்தொலியானது, நன்கு - மிகவும், இன்னா—; குழவிகள் உற்ற - குழந்தைகள் அடைந்த, பிணி - நோய்கள், இன்னா—; அழகு உடையான் - அழகுடையவன், பேதை எனல் - பேதையென்று பிறரால் இகழப்படுதல், இன்னா—; எ-று.

கு-ரை. மேகமானது மழைபெய்யாமையும், குழலோசையினும் மரத்தோசையும், குழந்தைகளுக்கு நேர்ந்த நோய்களும், அழகுள்ளவன் பேதையாயிருத்தலும் தீயவென்பதாம்.

வி-ரை. மழையில்லையாயின் உலகியல் சிறிதும் நடவாதாதலால் 'எழிலி யுறைநீங்கி னீண்டையார்க்கின்னா' என்றும், குழலோசையினும் மரத்தோசை யின்பந்தராதாதலால் 'குழலி னினிய மரத்தோசை யின்னா' என்றும், பிணித்துன்பம் குழந்தைகள் பொறுத்தலரிதாதலால் 'குழவிக ளுற்ற பிணியின்னா' என்றும், அழகுடையவன் அதற்கேற்ப அறிவுடையானென்று சொல்லப்படுதலன்றி பேதையென்று சொல்லப்படுதல் மிகவும் இழிவாதலால் 'அழகுடையான் பேதையெனல் இன்னா' என்றும் கூறினார். பேதை - அறிவிலான். (நக)

பொருளிலான் வேளாண்மை காமுறுத லின்னா
நெடுமாட நீணகர்க் கைத்தின்மை யின்னா
வருமனை பார்த்திருந் தூணின்னா வின்னா
கெடுமிடங் கைவிடுவார் நட்பு.

ப-ரை. பொருள் இலான்-பொருளில்லாதவன், வேளாண்மை - (பிறர்க்கு) உபகாரஞ் செய்தலை, காமுறுதல் - விரும்புதல், இன்னா, நெடுமாடம் - நெடிய மாடங்கள் நிறைந்த, நீள் நகர் - பெரிய நகரத்தில், கைத்து இன்மை - பொருளில்லாதிருத்தல், இன்னா—; வருவந்திருக்கிற, மனை - வீட்டை, பார்த்திருந்து - பார்த்துக்கொண்டேயிருந்து, ஊண் - உண்ணுமுணவு, இன்னா—; கெடும் இடம் - கெடும்பொழுதில், கைவிடுவார் - கைவிடுவோருடைய, நட்பு - நட்பானது, இன்னா—; எ-று.

கு-ரை. பொருளில்லாதவன் வேளாண்மை செய்ய விரும்புதலும், பெரிய பட்டணத்தில் ஒருவன் பொருளில்லாதிருத்தலும், பிறர்மனையை எதிர்பார்த்திருந்து உண்ணுதலும், கெடுங்காலத்தில் கைவிடுவோரது நட்பும் தீயவென்பதாம்.

வி-ரை. வறியன் தானே துன்புறும்போது பிறர்க்கு உபகரிக்கக் கருதின் அது முடியாதாதலால் 'பொருளிலான் வேளாண்மை

காமுறுத லின்னா' என்றும், பெரிய நகரத்தில் வறியனா யிருத்தற் றீதாதலால், 'நெடுமாட நீணகர்க் கைத்தின்மை யின்னா' என்றும், பிறர்மனை யுணவுக் கெதிர்பார்த்திருந்துண்டல் மிகுதுன்பமாதலால் 'வருமனை பார்த்திருந் தூணின்னா' என்றும், கெடுதிக்காலத்தில் கைவிடுவார் நட்புத் துன்பஞ்செய்தலால் 'கெடுமிடங் கைவிடுவார் நட்பு இன்னா' என்றும் கூறினர். காமுறுதல்-ஒருசொல்; இதற்குப் பகுதி-காமுறு. (௩௭)

நறிய மலர் பெரிது நாறாமை யின்னா
துறையறியா னீரிழிந்து போகுத லின்னா
வறியான் வினாப்படுத லின்னா வாங்கின்னா
சிறியார்மேற் செற்றங் கொளல்.

ப-ரை. நறிய மலர் - நல்லமலரானது, பெரிது நாறாமை - மிகவும் மணக்காமை, இன்னா—; துறை அறியாதவன் - துறையறியாதவன், நீர் இழிந்து போகுதல் - நீரிலிறங்கிச் செல்லுதல், இன்னா; அறியான்-அறிவில்லாதவன், வினாபடுதல் (அறிவுடையோரால்)வினாவப்படுதல், இன்னா—; ஆங்கு - அவ்வாறே, சிறியார்மேல் - சிறியவர்மீது, செற்றம் கொளல் - கோவங்கொள்ளுதல், இன்னா—; எ-று.

க-ரை. நல்ல மலரானது மணக்காமையும், துறையறியாதவன் நீரிலிறங்கிச் செல்லுதலும், பேதையானவன் பெரியோரால் வினாவப்படுதலும், சிறியவர் மீது கோவங்கொள்ளுதலும் தீயவெனப்படும்.

வி-ரை. மணமில்லாதமலர் பயன்படுதலின்றாதலால் 'நறியமலர் பெரிது நாறாமையின்னா' என்றும், இறங்கு துறையறியாதவன் நீரில் இறங்கிச் செல்லுதல் அவனுக் கபாயத்தை யுண்டுபண்ணுமாதலால் 'துறையறியா னீரிழிந்து போகுத லின்னா' என்றும், அறிவிலான் அறிவுடையவரால் வினாவப்படின் இருதிறத்தார்க்கும் பயன் துன்பமேயாதலால் 'அறியான் வினாப்படுத லின்னா' என்றும், தன்னின் மெலியாரிடத் துண்டாகுங் கோவம் இம்மைக்கட்பழியும் மறுமைக் கட்பாவமும் பயத்தலின் சிறியார்மேற் செற்றங் கொளல் இன்னா என்றும் கூறினர். (௩௮)

பிறன்மனையாள் பின்னோக்கும் பேதைமை யின்னா
மறமிலா மன்னர் செருப்புகுத லின்னா
வெறும்புறம் வெம்புரவி யேற்றின்னா வின்னா
திறனிலான் செய்யும் வினை.

ப-உ-ர. பிறன் மனையாள் - பிறன் மனையாளுடைய, பின் - இடத்தை, நோக்கும் - பார்க்கிற, பேதைமை - அறியாமை, இன்னா—; மறம் இலா - வீரத்தன்மையில்லாத, மன்னர்-அரசர், செரு - போர்க்களத்தில், புகுதல்-பிரவேசித்தல், இன்னா—; வெறும் புறம் - வெறுமையாகிய முதுகினையுடைய, வெம் புரவி - வேகத்தையுடைய குதிரைமேல், எற்று - ஏறுதல், இன்னா—; திறன் இலான் - செய்வகையறியாதவன், செய்யும் வினை - செய்யுங்காரியம், இன்னா—; எ - று.

க-உ-ரை. பிறன்மனையாளிடத்தைப்பார்க்கும் பேதைமையும், வீரத்தன்மை யில்லாத அரசர் போர்முகத்திற் பிரவேசித்தலும், குதிரையின் வெறுமுதுகிலேறுதலும், செய்யும்வகை யறியாதவன் செய்யுங் காரியமும் தீயவென்பதாம்.

வி-உ-ரை. பிறர்மனை நயத்தல்போலப் பெரும்பாவ மொன்றில்லை யாதலால், 'பிறன்மனையாள் பின்னோக்கும் பேதைமை யின்னா' என்றும், வீரத்தன்மை யில்லாத அரசர் போர்க்கெழுதல் அவமானத்திற் கேதுவாதலால், 'மறமில்லா மன்னர் செருப்புகுத லின்னா' என்றும், கல்லணை யில்லாத குதிரைமேலேறுதல் அபாயத்துக் கேதுவாதலால் 'வெறும்புறம் வெம்புரவி யேற்றின்னா' என்றும், வகையறியாதவன் செய்யுங் காரியம் முற்றுப்பெறா தாதலால் 'திறனிலான் செய்யும் வினை இன்னா' என்றுங் கூறினார். வெறும்புறம் - கல்லணையில்லாத முதுகு. எற்று - தொழிற்பெயர். (௩௩)

கொடுக்கும் பொருளில்லான் வள்ளன்மை யின்னா
கடித்தமைந்த பாக்கினுட் கற்படுத லின்னா
கொடுத்து விடாமை கவிக்கின்னா வின்னா
மடுத்துழிப் பாடா விடல்.

ப-ரை. கொடுக்கும் - கொடுத்தற்குரிய, பொருள் இல்லான் - பொருளில்லாதவனது, வள்ளன்மை-கொடைத்தன்மை, இன்னா—; கடித்து அமைந்த - பிளந்தமைந்த, பாக்கினுள் - பாக்கினிடத்தில், கல் படுதல் - கல்லுண்டாயிருத்தல், இன்னா—; கொடுத்து - பொருள்கொடுத்து, விடாமை - அனுப்பாமை, கவிக்கு - கவிகளுக்கு, இன்னா—; மடுத்தழி - தானத்துக்கேற்க, பாடாவிடல் - அகப்படாதொழிதல், இன்னா—; எ - று.

க-ரை. பொருளில்லாதவனது உதாரத்துவமும், கடித்த பாக்கினுள்ளே கல்லிருத்தலும், கவிகளுக்குக் கொடுத்தனுப்பாமையும், கொண்ட தானத்துக் ககப்படாதொழிதலும் தீயவன்பதாம்.

வி - ரை. பொருளில்லாதவனது ஔதாரியம் தீதாதலால், 'கொடுக்கும் பொருளில்லான் வள்ளன்மை யின்னா' என்றும், கடித்த பாக்கிற் கல்லிருக்குமாயின் அது மூர்ச்சை முதலிய தீமைகளை யுண்டாக்கலால் 'கடித்த மைந்த பாக்கினுட் கற்படுத லின்னா' என்றும், வித்வான்களுக்குப் பொருள்கொடுத் தனுப்பாமை துன்பமாதலால் 'கொடுத்து விடாமை கவிக்கின்னா' என்றும், தானத்துக்கேற்க அகப்படா தொழிதல் தீதாதலால், 'மடுத்தழிப்பாடாவிடல் இன்னா' என்றும் கூறினார். கவிபாடுவோனைக் கவியென்றது வடநூன் மதம்பற்றி யென்க. படாவிடல் என்பது பாடாவிடல் என நீட்டல் பெற்றது. (௩௦)

அடக்க முடையவன் மீளிமை யின்னா
துடக்க மிலாதவன் றற்செருக் கின்னா
வடைக் கலம் வவ்வுத லின்னாவாங் கின்னா
வடக்க வடங்காதார் சொல்.

ப-ரை. அடக்கம் உடையவன்-ஐம்பொறியடக்கமுடைய ஒருவன், மீளிமை - சொல்வன்மை, இன்னா—; துடக்கம் இலாதவன் - தொடங்கிய காரியத்தைச் செய்யமாட்டாதவன், தற்செருக்கு - தன்னைத்தானே மதித்தல், இன்னா—; அடைக்கலம்-அடைக்கலப் பொருளை, வவ்வுதல் - கவர்ந்து கொள்ளுதல், இன்னா—; ஆங்கு - அவ்வாறே, அடக்க - அடக்கவும், அடங்காதார் - அடங்காதவருடைய, சொல் - சொல்லானது, இன்னா—; எ - று.

க-ரை. அடக்கமுடையவனது மீளிமையும், தொடங்கிய காரியத்தைச் செய்யமாட்டாதவன் தன்னைத்தானே மதித்தலும், அடைக்கலம் வைத்த பொருளைக் கவர்ந்து கொள்ளுதலும், அறிவுடையோர் அடக்கினும் அடங்காதவரது வாய்ச்சொல்லும் தீயவென்பதாம்.

வி-ரை. மீளிமை - வீரத்திறம் எனினுமாம். துடக்கம் - ஆரம்பம்; இதற்கு துடங்கு பகுதி. அடைக்கலம் - அடைக்கலப்பொருள். அடக்கம்-தொழிற்பெயர்; அடங்கு பகுதி. ஐம்பொறி யடக்க முடையவன் வீரத்திறம் பேசுதல் தீதாதலால் 'அடக்க முடையவன் மீளிமையின்னா, என்றும்' ஒருகாரியத்தைத் தொடங்கி முடிக்கமாட்டாதவன் தன்னைத்தானே மதித்தல் தீதாதலால் 'துடக்க மிலாதவன் றற்செருக் கின்னா' என்றும், ஒருவர் கொண்டுவந்து காப்பாற்றிவைத்துக் கேட்கும்போது கொடுக்கவேண்டுமென்று சொல்லி நம்பி வைத்த பொருளைக் கவர்ந்துகொள்ளுதல் போலப் பெரும்பாவம் பிறிதொன்றின்மையால் 'அடைக்கலம் வவ்வுத லின்னா' என்றும், அடங்காதாருடைய வாய்ச்சொல்லுந் தீதுண்டாக்கலால் அடக்க வடங்காதார் சொல் இன்னா; என்றும் கூறினர். (௪௧)

## இன்னா நாற்பது மூலமும் உரையும்

## முற்றுப்பெற்றது.

கடவுள்துணை.

# இன்னாநாற்பது

# செய்யுள் முதற்குறிப்பகராதி.

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| அடக்க ... | ... 39 |
| அறமனைத்தார் ... | ... 6 |
| ஆறறலிலாதான் | ... 8 |
| ஆன்றவிந்த ... | ... 18 |
| ஈத்துவகையார் ... | ... 22 |
| உடம்பாடிலாத ... | ... 12 |
| உண்ணுதுவைக்கும் | ... 18 |
| ஊரணுடையா ... | ... 20 |
| எருதிலுழவர்க் ... | ... 5 |
| எழிலி ... | ... 35 |
| ஏமரில்மூது ... | ... 25 |
| ஒழுக்க ... | .. 34 |
| கல்லாதானொருவ | ... 29 |
| கள்ளில்லா ... | ... 10 |
| கள்ளுண்பான் ... | ... 33 |
| குலத்துப் ... | ... 21 |
| குறியறியான் ... | ... 30 |
| கொடுக்கும் ... | ... 18 |
| கொடுங்கோன் ... | ... 4 |
| சிறையில் ... | ... 5 |
| சிறையில்லா ... | ... 24 |
| தலைதண்டமாக... | ... 13 |
| தன்னைத்தான் ... | ... 33 |
| நட்டாரிடுக்கண் | ... 26 |
| நறிய ... | ... 37 |
| நெடுமெறநீள்கோட் | ... 31 |
| பகல்போலு ... | ... 9 |
| பந்தமில்லாத ... | ... 2 |
| பண்ணமையா ... | ... 32 |
| பார்ப்பாரிற் ... | ... 3 |
| பிறன்மனையாள் | ... 38 |
| புல்லார்புரவி ... | ... 17 |
| பெரியாரோ ... | ... 27 |
| பெருமையுடை ... | ... 28 |
| பொருளிலான் ... | ... 36 |
| பொருளுணர்வா | ... 10 |
| மணியிலாக்குஞ்ச. | ... 14 |
| மாரிநாட்கூவுங் ... | ... 22 |
| முக்கட்பகவ ... | ... 1 |
| யானையின்மன்னரை | ... 23 |
| வணரொளியைம் | ... 16 |